


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 30.11.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்












## தமிழக நிகழ்வுகள்

- **லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் 2013-ன் 63-வது** பிரிவுப்படி, ஒவ்வொரு மாநிலமும் மற்றும் யூனியன் பிரதேசமும் சட்டம் இயற்றி லோக் ஆயுக்தா நீதிமன்றத்தை அமைக்க வேண்டும். அதன்படி, தமிழக அரசானது, அரசியல் விதிகள், அதிகாரிகளின் ஊழல் புகார்களை விசாரிக்கும் **"லோக் ஆயூக்தா"** அமைப்பதற்கான பணியை தொடங்கியுள்ளது.
    - தமிழக அரசு சார்பில் **"தமிழ்நாடு லோக் ஆயூக்தா விதிகள் - 2018"** என்ற அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயல்படும் நோக்கிலும், பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கும் நோக்கிலும் **இந்திய – சீனா** ஆகிய நாடுகளின் இராணுவப் படைகள் பங்கேற்கும் **14 நாள்கள்** நடைபெறும் கூட்டுப்பயிற்சி **(Hand In Hand)** டிசம்பர் 10 முதல் தென்மேற்கு சீனாவிலுள்ள செங்டு பகுதியில் தொடங்க உள்ளதாக சீன பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
    - **Hand In Hand** வரிசையில் இது **7-ஆவது** இராணுவ கூட்டுப்பயிற்சி ஆகும்.

## உலக நிகழ்வுகள்

- தெற்காசிய நாடுகளுக்கிடையேயான நல்லுறவு, பிராந்திய ஒத்துழைப்பு ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக, 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் **சார்க் உச்சி மாநாடு 2018** ஆம் ஆண்டில் **பாகிஸ்தானில்** நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ளும்படி பிரதமர் மோடிக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது. கடைசியாக**, 2014-இல் SAARC மாநாடு** நேபாளத்தின் காத்மண்டு நகரில் நடந்தது.
- குறிப்பு :
    - சார்க்**(SAARC- South Asian Association for Regional cooperation)** :
    - தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு அல்லது சார்க் (SAARC), **டிசம்பர் 8, 1985-இல்** ஏற்படுத்தப்பட்டது.

- தெற்காசியாவின் 8 நாடுகள் **(இந்தியா, பாகிஸ்தான், வங்காள தேசம், இலங்கை, மாலத்தீவு, பூடான்)** உறுப்பினர்களாக உள்ளன.
- 2007ல் **ஆப்கானிஸ்தான் 8-வது** உறுப்பு நாடாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- இங்கிலாந்தின் லண்டன் நகரில் நடைபெற்ற 2018 ஆம் ஆண்டின் **செஸ் உலக சாம்பியன்ஷிப்** போட்டியில் **நார்வே நாட்டின் மேக்னஸ் கார்ல்சன்,** அமெரிக்காவின் ஃபயியானோ கருணா-வை வென்று நான்காவது முறையாக **உலக சாம்பியன் பட்டத்தை** வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- ஈஸிபோன் பிராண்ட் கைபேசி தயாரிப்பு நிறுவனமான இநோவஸ் **(enovus)** என்ற நிறுவனமானது குழந்தைகள் பாதுகாப்பாகவும், பெற்றோருடன் இணைப்பில் இருக்கும் வகையில் இந்தியாவின் குழந்தைகளுக்கான முதல் கைபேசியான **"ஈஸிபோன் ஸ்டார்"** என்ற கைபேசியை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - கட்டுப்படுத்தப்பட்ட முன் உள்ளீடு செய்யப்பட்ட எண்களை மட்டுமே அழைக்கும் வசதி, **GPS & SOS** உள்ளிட்ட பல சிறப்பம்சங்களை இந்த கைபேசி கொண்டுள்ளது.

## விருதுகள்

- இந்திய பொறியாளர் மையம் - குவைத் கிளையின் சார்பில் குவைத் நகரில் நடைபெற்ற **51-வது பொறியாளர்** தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இஸ்ரோ செயற்கைகோள் மையத்தின் முன்னாள் இயக்குநரும், விண்வெளி விஞ்ஞானியுமான **'மயில்சாமி அண்ணாதுரை"**க்கு **"செவ்வாய் மனிதன்"** என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளது.
  - செவ்வாய் கிரகத்துக்கு வெற்றிகரமாக மங்கல்யான் என்னும் விண்கலத்தை அனுப்பியதற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் (**UPSC**) புதிய தலைவராக அரவிந்த் சக்சேனா (**Arvind Saxena**) நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனத்துக்கு ஜனாதிபதி **ராம்நாத் கோவிந்த்** ஒப்புதல் அளித்துள்ளார்.
  - அரவிந்த் சக்சேனா நவம்பர் 29-ஆம் தேதி **(UPSC – Union Public Service Commission)** –ன் தலைவராக பதவியேற்றுள்ளார்.

- மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம், தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தின் (**NSDC**) தலைவராக திரு ஏ எம் நாயக் (**Anil Manibhai Naik**) என்பவரை நியமித்துள்ளது.
  - இந்தியாவின் பெரும் பொறியியல் மற்றும் கட்டுமான நிறுவனமான லார்சன் மற்றும் டூப்ரோ நிறுவனத்தின் தலைவராக ஏ.எம் நாயக் உள்ளார்.
  - **NSDC – National Skill Development Corporation**

## முக்கிய தினங்கள்

- பாலஸ்தீனிய மக்களுக்கான **"சர்வதேச ஒருமைப்பாட்டு தினம்" – நவம்பர் 29**
  - 1967 ஆம் ஆண்டு அரபு - இஸ்ரேலியப் போரின் தொடக்கத்திலிருந்து இஸ்ரேல் நாடு, மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் காசா மற்றும் சீரிய கோலன் ஆகியவற்றின் ஆக்கிரமிப்பால் ஆயிரக்கணக்கான **பாலஸ்தீனியர்கள் மற்றும் சிரியர்களை இடம்பெயரச் செய்ததன் காரணமாக ஆண்டுதோறும், நவம்பர் 29 அன்று** பாலஸ்தீனிய மக்களுக்கான "சர்வதேச ஒருமைப்பாட்டு தினம்" (International Day of Solidarity with the Palestinian People) அனுசரிக்கப்படுகிறது.